[17th August 1963

எவ்வித வேறுபாடும் இல்லாதிருக்கும்போது, அரசாங்க மருத்துவ மனையில் பணி செய்பவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை எல்லாம் மாஜி ஜில்லா போர்டு ஊழியர்களுக்கும் அளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஜில்லா போர்டுகளை அபாலிஷ் பண்ணின பிறகு உடனடியாக ஊழியர்களைப் பற்றிய தகவல்களைக் கேட்டிருந்தோம். இன்னும் அவை வரவில்லை. அந்தத் தகவல் வந்தபிறகு அதைப்பற்றி பரிசீலனை செய்து முடிவு செய்யப்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

Judicial functions of H.R. and C.E. Department.

* 197 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the Government are aware of the difficulties of the public in going over to the Headquarters of the Deputy Commissioners of H.R. & C.E. to attend their courts; and

(*b*) if so, whether the Government propose to transfer the Judicial powers to the respective District Munsifs for the convenience of the public ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: கோயில்களைப் பொறுத்த வரையில் நீதியும், நிர்வாகமும் டெபுடி கமிஷனரிடம் இருப்பதால் அவர் கோயிலுக்குச் சாதகமாகவே தீர்ப்புகள் வழங்கிக்கொள்ளக் கூடும். ஆகவே நீதியைப் பிரித்து முன்சிப் கோர்ட்டுக்குக் கொடுக்க ஆட்சேபணை உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது சட்டப்படி நடைபெறுவது. இந்த மன்றம் தான் அந்தச் சட்டத்தை இயற்றியிருக்கிறது. இந்த அம்சங்கள் எல்லாவற்றையும் நன்றாகப் பரிசீலனை செய்து தான் இந்தச் சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே சட்டத்தைத் திருத்தினலொழிய அப்படிப் பிரிக்க முடியாது. சட்டத்தைத் திருத்துவதாக இல்லை.

கடலூர் துறைமுகம் (அபிவிருத்தி)

* *198* **கேள்வி.—திரு. கே. நாராயணசாமிப்பிள்ளை:** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூர் ஓ.டி.-ஐ பெரிய துறைமுகமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(இ) அதற்காக எவ்வளவு பணம் செலவிடப்படும் ?

THE HON. SRI V. RAMIAH : (*a*) The plans and estimates for the scheme have been sent to the Government of India, Ministry of Transport and Communications for their approval.

(*b*) About Rs. 145 lakhs.